# மெட்ரோ ரெயிலுக்கு ரூ.600 கோடி ஒதுக்கீடு



பட்ஜெட்டில் கூறி இருப்பதாவது:-

சென்னை மாநகரின் போக்குவரத்துத் தேவையைநிறைவு செய்யக்கூடிய பெருந்திட்டமான மெட்ரோ ரயில் திட்டப்பணிகள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. கோயம்பேடு முதல் அசோக் நகர் வரையிலான உயர்த்தப் பட்ட வழித்தடம் அமைப்பதற் கான கட்டுமானப்பணி நடை பெற்று வருகிறது. அசோக் நகர் முதல் புனித தோமையர் மலை வரையிலும், சைதாப் பேட்டை முதல் ராணுவ அலுவலர் பயிற்சி மையம் வரையிலான உயர்த்தப்பட்ட வழித்தடங்களுக்கான ஒப்பந் தப்புள்ளிகள் அண்மையில் முடிவு செய்யப்பட்டுள்ளன. 2009 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்ட வாறு, இத்திட்டத்தில் திருவொற்றியூர் இணைக்கப் படுவதற்கான ஆய்வுப்பணி களும் நடைபெற்று வருகின் றன. மெட்ரோ ரயில் திட்டத்திற்குத் தமிழக அரசின் பங்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 600 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.